(சுருக்கம்)

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – அனைத்து துறைகளிலுள்ள சில வகை அமைச்சு பணியிடங்களுக்கு ஊதிய திருத்தம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:63

நாள்: 26—2—2011.
மாசி, 14.
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

படிக்கவும்:--

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
2. அரசாணை நிலை எண்.235, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
3. அரசு கடித எண்.41530 / ஊதியப் பிரிவு / 2009–1, நிதித்துறை, நாள்: 28–7–2009.
4. அரசு கடித எண்.63305 / ஊதியப் பிரிவு / 2010–1 மற்றும் 2, நிதித்துறை, நாள்: 8–11–2010.
5. அரசாணை நிலை எண்.45, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 10–2–2011.
6. தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்திடமிருந்து பெறப்பட்ட மனு நாள்: 14–2–2011 மற்றும் பிற அமைச்சுப் பணியாளர் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.

- - - - -

**ஆணை:–**

அலுவலர் குழு, 2009–ன் பரிந்துரைகளின்படி அனைத்து துறைகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பணியிடங்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 அனுமதித்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–1–2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வாறே அனுப்புகை உதவியாளர், பதிவுரு உதவியாளர், பதிவுருப் பொறுப்பாளர் (Record Keeper), தொலைபேசி இயக்குபவர், தொலையச்சு இயக்குபவர் ஆகிய பணியிடங்களுக்கும் திருத்திய ஊதிய விகிதம் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டது.

2. இந்நிலையில் மேலே 5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களுக்கு ஊதிய விகிதம் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–ஆக திருத்தியமைத்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–2–2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. இச்சூழ்நிலையில் மேற்காணும் பொது வகைப் பணியிடங்களுக்கு (Common Category Posts) ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதனை மேற்கோள்காட்டி இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கிணையான அவர்தம் நிலையில் ஊதிய விகிதம் பெற்று

வந்த பிற வகை பணியிடங்களான அனுப்புகை உதவியாளர், பதிவுரு உதவியாளர், பதிவுரு பொறுப்பாளர், தொலைபேசி இயக்குபவர், தொலையச்சு இயக்குபவர், ஆய்வுக்கூட உதவியாளர்களின் ஊதிய விகிதத்தை அமைச்சுப்பணி இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தற்போது உயர்த்தி வழங்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்தினை இப்பணியிடங்களுக்கும் நீட்டித்து ஆணைகள் வெளியிடுமாறு மேலே–6-ல் படிக்கப்பட்ட மனுவில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மற்றும் பிற அமைச்சுப்பணியாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளது.

**4.** மேற்கண்ட அலுவலர் சங்கங்களின் கோரிக்கையினை அரசு கனிவுடன் பரிசீலித்து அனுப்புகை உதவியாளர், பதிவுரு உதவியாளர், பதிவுருப் பொறுப்பாளர், தொலைபேசி இயக்குபவர், தொலையச்சு இயக்குபவர் ஆகிய பணியிடங்களுக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு அனுமதிக்கப்பட்ட முந்தைய ஊதிய விகிதமான ரூ.**3200—4900–**க்கு இணையான திருத்திய ஊதிய விகிதம் அலுவலர் குழு, **2009–**ன் பரிந்துரையின்படி ரூ.**5200—20200** + தர ஊதியம் ரூ.**2000** நிர்ணயம் செய்யப்பட்டு சமநிலையில் இருந்து வந்துள்ள நிலையினைக் கருத்தில் கொண்டு மேலே **5–**ல் படிக்கப்பட்ட அரசாணையில் இளநிலை உதவியாளர்களுக்கு ரூ.**5200—20200** + தர ஊதியம் ரூ.**2000–**லிருந்து ரூ.**5200—20200** + தர ஊதியம் ரூ.**2400** என திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தை மேற்கண்ட பணியிடங்களுக்கும் நீட்டிக்கலாம் என முடிவெடுத்து கீழ்கண்டவாறு ஊதிய திருத்தங்கள் மேற்கொள்ள அரசு ஆணையிடுகிறது :––

| வரிசை எண். | **பணியிடங்களின் பெயர்** | **தற்போதைய ஊதிய விகிதம் (ஊதிய விகிதம் + தர ஊதியம்)** | **திருத்தியமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம்** |
|---|---|---|---|
| **1.** | தொலைபேசி இயக்குபவர்,<br>தொலையச்சு இயக்குபவர்,<br>அனுப்புகை உதவியாளர்,<br>பதிவுரு உதவியாளர் (Record Assistant),<br>பதிவுருப் பொறுப்பாளர் (Record Keeper) | 5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |
| **2.** | ஆய்வக உதவியாளர் (1––1––2006–க்கு முன்னர் ரூ.3050—4590 / ரூ.3200––4900 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்) | 5200—20200 + 1900<br>5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |

**6.** மேற்கண்ட ஊதிய திருத்தங்கள் **1–1–2006** முதல் கருத்தியலாகவும் **1–3–2011** முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை–2/9.
செயலாளர், சட்டமன்றப் பேரவை, தலைமைச் செயலகம், சென்னை–2.
ஆளுநரின் செயலாளர், சென்னை–32.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், கிண்டி, சென்னை–32.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள் (அ.ந.மு / பட்டியல்கள்) , சென்னை – 2/9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள்.

மாநில கணக்குத் துறைத் தலைவர் ( கணக்குகள் (ம) உரிமைத் தொகை) , சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–9 / மதுரை.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
தமிழ்நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
கருவூலங்கள் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/8.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்குத்துறை, சென்னை-15.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / தூத்துக்குடி / வேலூர் / திருப்பூர் / ஈரோடு.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் / கோட்டாட்சியர்கள் / வட்டாட்சியர்கள்/ வட்டார வளர்ச்சி அலுவலர்கள் / நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சங்கங்கள்.

<u>நகல் பெறுவோர்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—2.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—2.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

ஆராய்ச்சி அலுவலர்.